1995 ஏப்ரல் 21]

பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் சமீப காலத்தில் சுமார் 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குறைந்த மின் அழுத்தப் பாதைகள்--எல்.டி.நெட்வொர்க் சீரமைக்கும் பணி நிறைவேற்றப்பட உள்ளது. ஆகவே பழுதடைந்த கேபிள்களை மாற்றவும் குறைந்த அழுத்தக் கேபிள்கள் அதைவிட அழுத்தமுள்ள கேபிள்களாக மாற்றும் திட்டங்கள் ஆராயப்பட்டு, இனிமேல் செயல்படுவதற்கான நடைமுறைகளை மின்சார வாரியம் பின்பற்றி வருகிறது. அது தவிர, மின் பயனீட்டாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு மின் தடை நீக்கப் பணியமைப்பு, அதாவது Fuse-off call centre ஒன்று செம்பியத்திலும் மற்றொன்று பெரம்பூரிலும் வெவ்வேறு ஊர்திகளுடனும் தொலைபேசி வசதிகளுடனும் செயல்படுகிறது. மின் தடை நீக்கப் பணிகளுக்கு என்றே தனிப்பட்ட முறையில் 24 மணி நேரமும் ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே புரட்சித்தலைவி ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே தான் சென்னை மாநகர் மின் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு என்று நவீன நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான் ஆங்காங்கே இயற்கையாக மின் தடைகள் ஏற்படுகின்றபோது நம்முடைய மின்சார வாரிய ஊழியர்களுக்கு ஏற்கெனவே வாகன வசதிகளும் ஒயர்லெஸ் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே உடனடியாக அந்தப் பகுதிகளுக்குச் சென்று மின் விநியோகத்தை ஒழுங்குப்படுத்துவதற்கான நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பேரவை விதிகளின்படி உரிய காலத்திற்குள் கேள்விகளுக்கு பதில் அனுப்பிவைக்க துறை அதிகாரிகளுக்கு அமைச்சர்கள் அறிவுரைகள் வழங்க வேண்டியது குறித்து--பேரவைத் தலைவரின் அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில்கள் குறித்து ஒரு சிறிய வேண்டுகோள். நம்முடைய பேரவை விதிகளின்படி, கேள்விகள் உரிய துறைகளால் 42 நாட்களுக்குள் பரிசீலிக்கப்பட்டு, நமக்குப் பதில் வரவேண்டுமென்று இருக்கிறது. பொதுப்பணித் துறையைப் பொறுத்த மட்டில் ஏராளமான கேள்விகள் இருக்கின்றன. அதையும் நான் அறிவேன். ஆயிரக்கணக்கான கேள்விகள் பொதுப்பணித் துறையைப் பொறுத்து மட்டும் வருகின்றன.

எனவே அவர்களும் அதற்குரிய பதில்களை வேகமாகப் பெற்றுத் தருகிறார்கள். ஆனால் ஒன்றிரண்டு கேள்விகள் அவருக்கு வந்து பேரவைச் செயலகத்திற்குக் கொடுக்கப்படுவதிலேகூட தாமதம் அதிகாரிகள் மட்டத்திலே நிகழ்ந்துவிடுகிறது என்றுதான் இந்தக் கேள்வியைப் பொறுத்தமட்டில் தெரிய வருகிறது. எனவே, இந்த 42 நாள் என்று இல்லாவிட்டாலும், அடுத்த கூட்டத் தொடருக்குள் எப்படியும் எங்களுக்குப் பதில் வந்துவிட்டால், நாள்தோறும் அவர்களுக்கு இரண்டிரண்டு கேள்விகளைக் கொடுத்தது போக, மீதம் இருக்கிற கேள்விகளை உடுக்குறியிடாத வினாக்களாக (unstarred questions) நாங்கள் டேபிளில் வைத்துவிடுவோம். அது இப்படிப்பட்ட தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே எல்லா அமைச்சர்களையும் இந்தத் தருணத்தில் நான் கேட்டுக் கொள்வது, கேள்விகளுக்கு உரிய கால அளவிற்குள் பதில் தருவதற்கான உரிய ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து தரவேண்டும் என்று அவரவர்களுடைய துறையினர்களுக்கு நீங்கள் அறிவுறுத்த வேண்டும்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 389, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

389—

பெரியார் கால்வாயில் பாலம் கட்டுதல்.

*20536—டாக்டர் மு. காளிராஜன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மேற்கு பஞ்சாயத்து யூனியனில் மாலைப்பட்டி பஞ்சாயத்துக்கும், பூலாம்பட்டி பஞ்சாயத்துக்கும் இடையில் பெரியார் கால்வாயில் பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,